# 22.04.2026 செய்திகள்

## லாரியஸ் உலக விளையாட்டு விருதுகள்

- லாரியஸ் உலக விளையாட்டு விருதுகளில், இந்த ஆண்டு சிறந்த வீரர் மற்றும் சிறந்த வீராங்கனையாக டென்னிஸ் போட்டியாளர்களே தேர்வு செய்யப்பட்டனர்.
- சிறந்த வீரருக்கான விருதை ஸ்பெயின் டென்னிஸ் நட்சத்திரம் கார்லோஸ் அல்கராஸும், சிறந்த வீராங்கனை விருதை பெலாரஸ் டென்னிஸ் பிரபலம் அரினா சபலென்காவும் வென்றனர்.
- விளையாட்டு உலகில் கௌரவமிக்கதாக இருக்கும் இந்த விருதை, லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் 'லாரியஸ் ஸ்போர்ட் ஃபார் குட்' அறக்கட்டளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.
- அந்த வகையில் 2025-ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல்பட்ட வீரர், வீராங்கனைகள், அணிகளுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி, ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் இந்திய நேரப்படி திங்கள்கிழமை நள்ளிரவு நடைபெற்றது.
- பரிந்துரையில் இந்தியா: சிறந்த அணிகளுக்கான பிரிவில், முதல்முறையாக உலகக் கோப்பை வென்ற இந்திய மகளிர் கிரிக்கெட் அணியும் பரிந்துரையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## நொய்டா தொழிலாளர் போராட்டம்

- டெல்லி அருகே உத்தரப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் நொய்டா நகரம் நாட்டின் முக்கியத் தொழில் துறை மையம், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பில் வாகன உதிரிபாகங்கள், விமான உதிரிபாகங்கள், மின் / மின்னணு சாதனங்கள் உள்ளிட்டவை தயாரிக்கப்படுகின்றன.
- இவர்களில் பெரும்பாலானோர் ரூ. 10,000இல் இருந்து ரூ. 14,000 வரை மாதச் சம்பளம் பெறும் அமைப்புசாராத் தொழிலாளர்கள்: பலர் புலம்பெயர் தொழிலாளர்கள்.
- புறநகரில் நெரிசலான குடியிருப்புப் பகுதிகளில் வாழும் இவர்கள், சொற்ப ஊதியத்தால் பல ஆண்டுகளாகத் திண்டாடிவருகின்றனர்.
- கடந்த சில மாதங்களாக நிலவும் எரிவாயுப் பற்றாக்குறையால் ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வும் இவர்களைப் பாதித்துள்ளது.

- இந்நிலையில் கடந்த ஏப்ரல் 13, 14 ஆகிய இரண்டு நாள்களில் நொய்டாவின் தொழிற்பேட்டைப் பகுதிகளில் இந்தத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.
- அமைதி வழியில் தொடங்கிய போராட்டத்துக்கு நடுவே எதிர்பாராமல் வன்முறை வெடித்தது.
- கண்ணீர்ப் புகை குண்டு வீசிய காவல் துறையினர் 300க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களைக் கைதுசெய்தனர்.
- இதையடுத்து நொய்டா, காஸியாபாத்தில் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தில் 21%வரை இடைக்கால உயர்வு அளிப்பதாக உத்தரப்பிரதேச அரசு அறிவித்தது.
- இதன்படி ரூ. 11,313 ஈட்டிவந்த பயிற்சியற்ற தொழிலாளர் இனி ரூ. 13,690 பெறுவார்: ரூ.12,445 ஊதியம் பெற்ற ஓரளவு திறன் பெற்ற (semi skilled) தொழிலாளர் இனி ரூ. 15,059 பெறுவார்: ரூ. 13,940 அளிக்கப்பட்ட திறன்மிகு தொழிலாளருக்கு இனி ரூ. 16,868 வழங்கப்படும்.
- இந்த அறிவிப்புக்குப் பிறகு, தொழிலாளர்களில் சிலர் பணிக்குத் திரும்பினர். எனினும் போராட்டம் முழுமையாக முடிவுக்கு வந்துவிடவில்லை.
- ஹரியாணாவில் குறைந்தபட்ச ஊதியம் 35% (ரூ. 19,000 வரை) உயர்த்தப்பட்டபோதிலும், நொய்டாவில் நெடுங்காலமாக ஊதிய உயர்வோ, பணிச்சூழல் வசதிகளோ செய்து தரப்படவில்லை என்பதே போராட்டத்தின் மையப் பிரச்சினை.
- ஒரே பொருளாதார மண்டலத்தில், அதே உற்பத்திப் பணியைச் செய்யும் தொழிலாளர்களுக்கு மாநிலத்துக்கு மாநிலம் ஊதியம் வேறுபடுவதாக விமர்சிக்கப்படுகிறது.
- வழக்கமான 8 மணிநேர வேலைக்கு + அப்பால் கூடுதல் நேர வேலைக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்க வேண்டும் என்னும் விதிமுறையை மீறி 14 மணிநேரம்வரை முதலாளிகள் உழைப்புச் சுரண்டலில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.
- போராடியவர்களில் பெரும்பாலானோர் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாத ஒப்பந்தத் தொழிலாளர்கள். இவர்கள் அடிப்படைச் சமூகப் பாதுகாப்பு, சம்பளச் சீட்டு, பணி உறுதி போன்ற சட்டபூர்வப் பாதுகாப்பு இன்றித் தத்தளிப்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.
- அடுத்த மாதம் அமைக்கப்படும் ஊதிய வாரியத்தின் பரிந்துரைக்குப் பிறகே நிரந்தரக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.
- இதன்படி, மத்தியத் தொழிலாளர் நல அமைச்சகம் தேசிய அளவிலான குறைந்தபட்ச ஊதியத்தை நாளுக்கு ரூ. 350 ரூ. 450வரை உயர்த்துவது குறித்தும் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

SURESH